முள்ளிவாய்கால் மண்ணே வணக்கம்
மூச்சுள்ள தமிழ் வீரர் மண்ணே வணக்கம் 2
அள்ளிவீசும் புயல் காற்றாய் அடிதாய்
ஆயிரம் எரிமலை நெருப்பாய் வெடித்தாய் 2

முள்ளிவாய்கால் மண்ணே வணக்கம்
மூச்சுள்ள தமிழ் வீரர் மண்ணே வணக்கம்

நேற்று நீ நின்ற கோலத்ததை நிமிர்ந்து நின்ற தமிழீழத்தை
நாற்றிசை  வையம் மறக்குமா நாளை வரலாறு மறுக்குமா 2
புலிகள்படையோடு மக்கள் படையும் துடித்தெழுந்த களம் கண்டோமே
வலிமை கொண்டு கரும்புலிகள் களத்தில் வெடித்து விழ வெறி கொண்டோமே 2
தீரம் நீர் நிலை நாட்டினாய் விடுதலை கனல் மூட்டினாய்

முள்ளிவாய்கால் மண்ணே வணக்கம்
மூச்சுள்ள தமிழ் வீரர் மண்ணே வணக்கம்
அள்ளிவீசும் புயல் காற்றாய் அடித்தாய்
ஆயிரம் எரிமலை நெருப்பாய் வெடித்தாய்

சாவில் விழுந்த உடல் கண்டோம் தமிழர் செந்நீர் கடல் கண்டோம்
தாவும் வேங்கை மணம் கொண்டோம் தமிழர் நாங்கள் சினம் கொண்டோம் 2
முப்பதாயிரம் ஈழத்தமிழர் உயிரின் மூச்சு நீயம்மா
ஒப்பில்லாத முள்ளிவாய்க்கால் மண்ணே நீ எங்கள் தாயம்மா 2
தீரம் நீர் நிலை நாட்டினாய் விடுதலை கனல் மூட்டினாய்

முள்ளிவாய்கால் மண்ணே வணக்கம்
மூச்சுள்ள தமிழ் வீரர் மண்ணே வணக்கம்
அள்ளிவீசும் புயல் காற்றாய் அடித்தாய்
ஆயிரம் எரிமலை நெருப்பாய் வெடித்தாய்

முழங்கு கடலாய் நீ கொதித்தாய் முப்பது நாட்டை நீ எதிர்த்தாய்
விலங்கு நொருக்கி நீ எழுந்தாய் விண்ணில் இடிபோல் நீ விழுந்தாய்
உன்னால் எழுந்தோம் கொஞ்சம் பொறம்மா சிங்களம் விரைவில் உடையும்பார்
எங்கள் தமிழினம் ஈழத்தமிழினம் நாளை விடுதலை அடையும்பார்
தீரம் நீர் நிலை நாட்டினாய் விடுதலை கனல் மூட்டினாய்

முள்ளிவாய்கால் மண்ணே வணக்கம்
மூச்சுள்ள தமிழ் வீரர் மண்ணே வணக்கம் 2
அள்ளிவீசும் புயல் காற்றாய் அடித்தாய்
ஆயிரம் எரிமலை நெருப்பாய் வெடித்தாய்